சிறுவினா இயல் -1

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலேறு சுட்டுவன யாவை?
   - அன்னை மொழியே!
   - அழகாய் அமைந்த செழுந்தமிழே!
   - பழமைக்குப் பழமையையாய்த் தோன்றிய நறுங்கனியே!
   - கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே!
   - பாண்டிய மன்னனின் மகளே!
   - திருக்குறளின் பெரும் பெருமைக்கு உரியவளே!
   - பத்துப்பாட்டே!
   - எட்டுத் தொகையே!
   - பதினெண்கீழ்க்கணக்கே!
   - நிலைத்த சிலப்பதிகாரமே!
   - அழகான மணிமேகலையே!
   - பொங்கி எழும் நினைவுகளால் தலைப்பணிந்து வாழ்ந்துகின்றோம்.
2. ‘புளியங்கன்று ஆழ்மாக நடப்பட்டுள்ளது’.இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களை அமைக்க.
   - நெல் நாற்றுகள் வயலில் நடப்பட்டன.
   - வாழைக்கன்று நட்டு பராமரிக்கப்பட்டது.
   - மிளகாய்ச்செடி வரிசையாக நடப்பட்டது.
   - தென்னம்பிள்ளை ஆழமாக நட்டு வைக்கப்பட்டது.
   - சோள பைங்கூழ் காட்டில் விதைக்கப்பட்டது.
3. தமிழழகனார் தமிழயும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

| வ.எண் | பாடல் அடிகள் | தமிழ் | கடல் |
|---|---|---|---|
| 1. | முத்தமிழ் | இயல், இசை, நாடகம் | முத்திணை அமிழ்ந்து எடுத்தல் |
| 2. | முச்சங்கம் | முதல், இடை, கடை | மூன்று வகையான சங்குகள் தருதல் |
| 3. | மொத்தவணிகலன் (மெத்த + அணிகலன்) | ஐம்பெரும்காப்பியங்கள் | மிகுதியான வணிகக் கப்பல்கள் |
| 4. | சங்கத்தவர் காக்க | சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தல் | நீரிலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல் |

இயல் -2

4. உயிராக நான் ------ என காற்று தன்னைப் பற்றி பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப்பற்றிப் பேசினால் உங்களுடைய கற்பனையில் எழுதுக.
   - ✓ நீர் மனித வாழ்வின் அடித்தளம்.
   - ✓ ‘நீர் இன்றி அமையாது உலகு’ என்றார் திருவள்ளுவர்.
   - ✓ வேளாண் தொழிலுக்கு நீர் உயிர்நாடி.
   - ✓ நீராகிய நான் மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர், குடிநீர் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறேன்.
   - ✓ எனக்கு பல நீர்நிலைகள் உண்டு. அவை அருவி, ஆறு, ஏரி, கடல், உறைக்கிணறு, ஆழிக்கிணறு, கட்டுக்கிணறு, ஊற்று.
   - ✓ தமிழர்களின் கடல் வணிகம் மூலம் நான் பலவாறு பயன்பட்டேன்.

5. சோலைக்காற்றும் மின்விசிறிக்காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
   - ➢ சோலைக்காற்று
   - ➢ மின்விசிறிக்காற்று
     - ❖ சோலைக்காற்று - என்னைப்போல் இதமானகாற்றை உன்னால் தர முடியுமா?
     - ❖ மின்விசிறிக்காற்று - ஏன் தரமுடியாது! மெதுவாகவும் வீசுவேன், வேகமாகவும் வீசுவேன்.
     - ❖ சோலைக்காற்று - ஏன் நானும் மெதுவாகவும் வீசுவேன், வேகமாகவும் வீசுவேன்.
     - ❖ மின்விசிறிக்காற்று - என்னால்யாருக்கும் எந்த வித தீங்கும் ஏற்படாது.
     - ❖ சோலைக்காற்று - எளியோர்க்கு நான் தான் எளிதாக கிடைக்கிறேன்.
     - ❖ மின்விசிறிக்காற்று - வீடுகட்டி, வசதியாக வாழ்பவர்களுக்கு நான்தான் வீட்டை அழகு செய்கிறேன்.
     - ❖ சோலைக்காற்று - ஆனாலும் நாம் இருவருமே மனிதர்களுக்கு முக்கியம்.
     - ❖ மின்விசிறிக்காற்று - ஆம். நாம் இணைந்து மனிதர்களுக்கு இதமளிப்போம்.
6. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.
   - தாழ்வாரங்களில் சொட்டும் நீர் போடும் தாளம்.
   - மரங்களின் இலைகளில் சொட்டும் நீர்.
   - மழலை மாறாத நதியோசை.
   - தெருக்களில் தேங்கியகுட்டைகளில் சளப்தளப் என குதித்து விளையாடும் குழந்தைகள்.
   - வண்டுகள் இசைக்கும் சத்தம்.
   - காகித கப்பல் விட்டு மகிழும் சிறுவர்களின் கூச்சல். இவையே மழைநின்றவுடன் புலப்படும் காட்சி ஆகும்.
7. ஓசோன் படலத்தைப் பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.
   - ✓ கதிரவனிடம் இருந்து வெளிவரும் புறஊதாக் கதிர்களைத் தடுக்கும் அரணாக விளங்குகிறது.
   - ✓ புவியை ஒரு போர்வை போல சுற்றிக் கிடந்து சூரியனின் கதிர்ச்சூட்டைத் தணிக்கிறது.
   - ✓ குப்பைகள், நெகிழிப்பைகள், மெது உருளைகள் போன்றவற்றை எரிப்பதால் ஓசோன் படலம் பாதிப்பு அடைகிறது.
   - ✓ குளோரோ புளோரோ கார்பன் என்னும் நச்சுக்காற்றை வெளிவரும் இயந்திரங்களான குளிர்பதனப்பெட்டி முதலானவற்றால் ஓசோன் படலம் பாதிப்படைகிறது.
   - ✓ ஓசோன் படலம் பாதிக்கப்படுவதால் மனிதர்களுக்கு,
     - ♦ நுரையிரல் புற்றுநோய்
     - ♦ இளைப்பு நோய்
     - ♦ காய்ச்சல்

     என இன்னும் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன.
8. மல்லிகைப்பூ, பூங்கொடி, ஆடுமாடு, குடிநீர், தண்ணீர்த்தொட்டி இந்தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு எழுதுக.

1. மல்லிகைப்பூ - <u>மல்லிகை</u> ஆகிய பூ = இருபெயரொட்டுப் பண்புத்தொகை.
2. பூங்கொடி - பெண்ணைக் குறிக்கிறது – அன்மொழித் தொகை.
3. ஆடுமாடு - ஆடும் மாடும் – உம்மைத்தொகை
4. குடிநீர் - குடித்த, குடிக்கின்ற, குடிக்கும் – வினைத்தொகை
5. தண்ணீர்த்தொட்டி - தண்ணீர் உடைய தொட்டி – வேற்றுமைத் தொகை.

## இயல் - 3

**9. தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

1. கண்ணே கண்ணுறங்கு - விளித்தொடர்
2. காலையில் நீயெழும்பு - வேற்றுமைத் தொகா நிலைத் தொடர்
3. மாமழை பெய்கையிலே - உரிச்சொல் தொடர்
4. மாம்பூவே கண்ணுறங்கு - விளித்தொடர்
5. பாடினேன் தாலாட்டு - வினைமுற்றுத் தொடர்
6. ஆடி ஆடி ஓய்ந்துறங்கு - அடுக்குத் தொடர்

**10. முல்லை நிலத்திலிருந்து மருத நிலத்திலிருந்தும் கிடைக்குக் உணவுப் பொருள்கள் யாவை?**

<u>முல்லை நில உணவுப் பொருள்கள்:</u>

- ❖ திணை
- ❖ வரகு
- ❖ சாமை
- ❖ முதிரை
- ❖ நெய்
- ❖ குதிரை வாலி
- ❖ பால்

<u>மருத நில உணவுப் பொருள்கள்:</u>

- ❖ செந்நெல்லரிசி
- ❖ வெண்ணெல் அரிசி

**11. தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.**

- ✓ புதியதாக வருவோர் இளைப்பாற வீட்டின் முன்புறம் திண்ணை அமைத்தனர் நம் முன்னோர்.
- ✓ இன்று வீட்டிற்கு முன் திண்ணை கட்டுவது இல்லை.
- ✓ திருமணம், வளைகாப்பு, பிறந்தநாள், புதுமனைபுகுவிழா, காதணிவிழா, பூப்பெய்தும் விழா போன்றவற்றை இல்ல விழாக்களாகவே கொண்டாடினர்.
- ✓ தற்போது சிறுவிழாக்கள் கூட திருமண மண்டபங்களுக்கு இடம் பெயர்ந்து விட்டனர்.
- ✓ பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது.
- ✓ ஆனால் இன்று பண்பாட்டு மாற்றமாக திருமண ஏற்பாட்டாளர்களே விருந்தினரை உபசரிக்கின்றனர்.

இவையே தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகள் ஆகும்.

**12. கூத்தனைக் கூத்தன் ஆற்றுபடுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?**

- ➢ நன்னன் என்ற வள்ளலிடம் சென்று பரிசுப்பெற்ற ஒருவன் பரிசுப் பெறப் போகும் கூத்தனை நீயும் அந்த வள்ளாலிடம் சென்று பரிசுப் பெற்று வருமாறு ஆற்றுப்படுத்துதல்.
- ➢ பகலில் இளைப்பாற்றிச் செல்லுங்கள்.
- ➢ இரவில் சேர்ந்து தங்குங்கள்.
- ➢ பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள்.

- அசோக மரங்களை உடைய  பாதையில் செல்லுங்கள்.
- மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.
- அங்கு உள்ளவர்களிடம் நன்னனின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.
- உங்கள் வீட்டில் நுழைவது போலவே நுழைந்து உறவினர் போல பழகுங்கள்.
- உங்களின் களைப்புத் தீர இனிய சொறகளை கூறுவர்.
- பிறகு நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

**13. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கம் பற்றி விலக்குக.**

இல்லற ஒழுக்கமானது, விருந்தினராக ஒருவர் வந்தால்,

- ✓ வியந்து உரைத்தல்
- ✓ நல்ல சொறகளைப் பேசுதல்
- ✓ முகமலர்ச்சியுடன் நோக்குதல்
- ✓ வருக என வரவேற்றல்
- ✓ எதிரில் நின்று உபசரித்தல்
- ✓ மனம் மகிழும்படி பேசுதல்
- ✓ அருகிலேயே அமர்ந்து இருத்தல்
- ✓ வாயில் வரை சென்று வழியனுப்புதல்
- ✓ புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல்

இவை ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற  ஒழுக்கமாகும்.

## இயல் – 4

**14. பெப்பர் குறிப்பு வரைக.**

- ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.
- இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.
- வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என்று மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன.
- இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு அதற்கேறபச் செயல்படிகின்றன.
- பெப்பர் ரோபோ
    - ✓ வரவேற்பாளர்
    - ✓ பணியாளர்
    - ✓ வீடுகள்
    - ✓ வணிக நிறுவனங்கள்
    - ✓ உணவு விடுதிகள்

    என இவற்றிற்கு பயன்படுத்துகிறார்கள்.

**15. “மாளாத காதல் நோயாளன் போல்” என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**

- வாளால் அறுத்துச் சுடினும் ----------
  ----------------------------------------------
  ----------------------------------------------
  ----------- -------பார்ப்பன் அடியேனே
- வித்துவக் கோட்டில் எழுந்தருளி இருக்கும் அன்னயே
- மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.
- அது போன்று நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அருளையே எதிர்பார்த்து எப்பொழுதும் வாழ்கின்றேன்.

16. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

- ✓ இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளில் நன்மை தீமை என இரண்டும் உண்டு.
- ✓ மனிதர்கள் அறிவியலை நன்மை கருதி செயல்பட வேண்டும்.
- ✓ வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றங்களைச் செய்து வருகிறது.
- ✓ பெரு நிருவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும் பயன்படுகிறது.
- ✓ மனித இனத்தைத் தீங்குகளில் இருந்து காப்பாற்றுகிறது.
- ✓ உடல் நலத்தைப் பேணுகிறது.
- ✓ கொடிய நோய்களை தொடக்கத்திலேயே கண்டறிய உதவுகிறது.

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன.

17. 'எதிர்காலத் தொழில்நுட்பம்' – என்ற தலைப்பில் எழுதுக.

- ❖ வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றங்களை செயற்கை நுண்ணறிவு கொண்டு வரப் போகிறது.
- ❖ வங்கிகளில் மனிதர்களின் சேவை குறைவாகவும் கண்னியின் சேவை அதிகமாகக் காணப்படும்.
- ❖ எதிர்காலத்தில் 'ரோபோ' விடம் குழந்தையை ஒப்படைத்து விட்டு நிம்மதியாக அலுவலகம் செல்லும் பெற்றோர்களை நாம் பார்க்கப் போகிறோம்.
- ❖ பெரு நிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும் பயன்படுகிறது.
- ❖ நம்முடன் உரையாடுவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது, குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவது எனப் பலவற்றைச் செய்யும்.
- ❖ வயதானவர்களுக்கு உதவி செய்யும் ரோபோக்கள் எதிர்காலத்தில் வந்துவிடும்.

18. இப்பத்தியில் உள்ள வழுவமைதிகளைப் பட்டியலிடுக.

- ➢ இலச்சுமி கூப்பிடுகிறாள்.
- ➢ என்னடா விளையாட வேண்டாமா?
- ➢ நீயும் இவனும்
- ➢ அவனை அவிழ்த்து விட்டேன்.
- ➢ இலச்சுமி தொட்டியிலிருந்து நீரைக்குடித்தாள்.

## இயல் – 5

19. மன்னன் இடைக்காடனர் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

- ❖ பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த மன்னன் குசேலபாண்டியன்.
- ❖ இம் மன்னனின் முன் புலவர் இடைக்காடனார் கவி பாடினார்.
- ❖ இவர் கவிக்கு மன்னன் செவி சாய்க்காததால் இடைக்காடானார் இறைவனிடம் முறையிட்டார்.
- ❖ இறைவன் கடம்பவன் கோவிலை விட்டு நீங்கினார்.
- ❖ இதனை அறிந்த மன்னன் இறைவனிடம் தன் குற்றத்தைப் பொறுத்து கொள்ளுமாறு வேண்டினான்.
- ❖ இறைவன் மன்னனிடம் குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒரு போதும் நீங்க மாட்டோம்.
- ❖ இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை.
- ❖ இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தோம் என்றார்.

- ❖ இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனைச் செய்து அலங்கரிக்கப்பட்ட அரண்மனையில் பொன் இருக்கையில் அமர்த்தினான்.
- ❖ இடைக்காடனாரிடம் தன் குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுமாறு பணிந்து வணங்கினான்.
- ❖ இடைக்காடனாரும் உன் அமுதம் போன்ற சொல்லால் என் சினத் தீ தணிந்தது மன்னா என்றார்.

20. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பை நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்.
    - ✓ கல்வி நம் வாழ்வை மும்மேற்றும் ஏணிப்படி.
    - ✓ நம் வாழ்வின் தரத்தை உயர்த்த கல்வி துணைப்புரிகிறது.
    - ✓ வாழ்வின் தடைகளை தகர்த்தெறிய கல்வி உதவுகிறது.
    - ✓ இந்த வருடம் படிப்பை முடித்துவிடு.
    - ✓ அடுத்த வருடம் வேலைக்குச் சென்று கொண்டே படிக்கலாம்.
    - ✓ எந்த சூழ்நிலையிலும் படிப்பை நிறுத்தி விடாதே.
    - ✓ அதில் நீ உறுதியாக இரு. என்று எடுத்துரைப்பேன்.
21. ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு என்ற பத்தியில் இருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.
    1. மொழிபெயர்ப்பு என்றால் என்ன?
    2. மொழிபெயர்ப்பாளர் எங்கே இருப்பார்?
    3. ஐ.நா. அவையில் காதணி கேட்பி எதற்குப் பயன்படுகிறது?
    4. ஐ.நா. அவையில் மொழிபெயர்ப்பாளர் பணி என்ன?
    5. ஐ.நா. அவையில் பேசுவதை எவ்வாறு புரிந்து கொள்ளலாம்?
22. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
    இன்மை புகுத்தி விடும்.
    இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.
    - ✓ இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோள் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.
    - ✓ பாடலின் தொடக்கம் முதல் முடிவுவரை ஆற்றில் நீர் ஓடுவதைப் போல நேராகவே பொருள் கொள்ளும் முறைக்கு ஆற்றுநீர்ப் பொருள்கோள் என்றுபெயர்.

## இயல் – 6

23. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
    - ➢ திருவடியில் அணிந்த பொன்னால் ஆன கின்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடட்டும்.
    - ➢ அரைஞாண் மணியோடு அரைவடங்கள் ஆடட்டும்.
    - ➢ தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடட்டும்.
    - ➢ குண்டலங்களும், காதின் குழைகளும் அசைந்து ஆடட்டும்.
    - ➢ உச்சிக் கொண்டை முத்துகளோடு ஆடட்டும்.
    - ➢ தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே ஆடுக செங்கீரை.
24. நவின கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம். பூத்தொடுக்கும் நாட்டுப்புறப்பாடல்களில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.
    நவின கவிதை:
    - ❖ பூக்களை இறுக்கமாக முடிச்சிட்டால் காம்புகளின் கழுத்து முறிந்துவிடும்.
    - ❖ தளர்வாகப் பூக்களைச் சேர்த்தால் தரையில் வீழ்ந்து விடும்.

- ❖ இங்கு பூவின் மென்மையும், அழகும், நளினமும் அருமையாக எடுத்து உரைக்கப்படிகிறது.

நாட்டுப்புறப் பாடல்:

- ❖ பூவைக் கையால் எடுத்து மாரியம்மனுக்குச் சூட்டினால் காம்பு அழுகிப் போகுமாம்.
- ❖ விரலால் பூவை எடுத்தால் வெதும்பி விடுமாம்.
- ❖ அதனால் தங்கத் துரட்டியால் மலரை எடுத்து மாரியம்மனுக்குச் சூட்டுவார்கள்.

இருபாடல்களிலும்,

- ❖ பூக்களின் தன்மை
- ❖ கையாள வேண்டிய நுட்பத்தன்மை

ஆகியவற்றை நாம் காண்கிறோம்.

25. பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.

<u>பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள்:</u>

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் |
| முல்லை | - | ஏறுதழுவுதல், நிரை மேய்த்தல் |
| மருதம் | - | நெல்லரித்தல், களை பறித்தல் |
| நெய்தல் | - | மீன்பிடித்தல், உப்பு விளைத்தல் |
| பாலை | - | வழிப்பறி, நிரைகவர்தல் |

<u>இன்றைய வளர்ச்சி:</u>

- ➢ குறிஞ்சி நில மக்கள் வீட்டுத்தோட்டம் அமைத்தல்
- ➢ முல்லை நில மக்கல் காட்டுப் பகுதிகளை திருத்தி தோட்டம் அமைத்தல்
- ➢ மருத நில மக்கள் நெல் பயிரிடுதல்
- ➢ நெய்தல் நில மக்கள் மீன்பிடித்தல்

26. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இராண்டு வினாக்களையும் அவற்றின் விடைகளையும் எழுதுக.

<u>பரதநாட்டியம்:</u>

- ✓ பழமையான கலைகளுள் ஒன்று பரதநாட்டியம்.
- ✓ பெண்கள் மட்டும் ஆடும் கலையாக இருந்தது.
- ✓ இன்று ஆண்களும் பெண்களும் ஆடும் கலையாக வளர்ச்சி அடைந்துள்ளது.
- ✓ இறைவனுக்கு உகந்த கலையாக பரதநாட்டியம் கருதப்படுகிறது.
- ✓ கோயில் திருவிழாக்களில் பரதநாட்டியம் முதன்மை இடம் பெறுகிறது.
- ✓ மக்கள் விரும்பும் கலையாகவும் பரதநாட்டியம் இருக்கிறது.

<u>கரகாட்டம்:</u>

- ✓ கரகாட்டம் என்பது கிராமிய நடனம்.
- ✓ ஆணும், பெண்ணும் சேர்ந்து ஆடும் ஆட்டம்.
- ✓ பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்து தாளத்திற்லு ஏற்ப ஆடுவது கரகாட்டம்.

## இயல் – 7

27. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவி பாடுகிறார்?

- ➢ முதல் மழை விழுந்ததும் மேல் மண் பம்படுத்தும் வகையில் பதமாகி விட்டது.
- ➢ வெள்ளி முளைத்துடுது.
- ➢ மாட்டைத் தூண்டி கொழுவை அமுத்து மண் புரளும்.
- ➢ மழை பொழியும்.
- ➢ நிலம் சிலிர்க்கும்.
- ➢ நாற்று நிமிரும்.

- எல்லைத் தெய்வம் எல்லாம் காக்கும்.

28. “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

இடம் : இத்தொடர் மாநகராட்சியின் சிறப்புக் கூட்டத்தில் மாநகரத் தந்தை செங்கல்வராயன் முன்னிலையில் ம.பொ.சிவஞானம் கூறியது.

பொருள்: ஆந்திராவின் தலைநகரம் சென்னையை வைக்க வேண்டும் என்று நீதிபதி வாஞ்சுவின் கருத்தை எதிர்த்து ம.பொ.சி. வாதிட்டார்.

விளக்கம் :
- ஆந்திரமாநிலம் பிரியும் போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர்.
- நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம் இடைக்கால ஏற்பாட்டினை பரிந்துரைத்தது.
- மாநகராட்சியின் சிறப்புக் கூட்டத்தில் மாநகரத் தந்தை செங்கல்வராயன் முன்னிலையில் “ தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்பேன்” என்று ம.பொ.சிவஞானம் முழங்கினார்.

29. பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.
- ✓ அரசர்கள் தங்கள் வரலாற்றின் பெருமையினை காலம் கடந்தும் நிலைக்க விரும்பினார்கள்.
- ✓ அழியாத வகையில் கல்லில் செதுக்கினார்கள்.
- ✓ பல்லவர்கால கல்வெட்டுகள்
- ✓ பாண்டியர் கால செப்பேடுகள்
- ✓ சோழர்கால மெய்க்கீர்த்திகள்

என அரசர்களின் மெய்ப்புகழை எடுத்துக் கூறுவதே இப்பத்தியின் மையக்கருத்தாகும்.

### இயல் – 8

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.
- வணிக அறம்:
  - அறம் செய்வதில் வணிக நோக்கம் கூடாது.
  - இப்பிறவியில் அறம் செய்தால் மறுபிறவியில் பெறலாம் என்ற வணிக நோக்குக் கூடாது.
- அரசியல் அறம்:
  - மன்னர்கள் நல்லாட்சி நடத்துவதே சிறந்த அறமாகக் கருதினர்.
  - அறநெறியில் ஆட்சி செய்வதற்கு அமைச்சரும் உதவினர்.
  - குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்கினர்.
- வாய்மை அறம்:
  - சங்ககால மக்கள் வாய்மையை சிறந்த அறமாகப் போற்றி வாழ்ந்தனர்.
  - உண்மை பேசும் நா(நாக்கு) மனிதனை உயர்த்துகிறது.
  - பொய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

31. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
- ✓ அகவல் ஓசை பெற்று வரும்.
- ✓ ஈரசைச்சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
- ✓ ஆசிரியத்தளை மிகுதியாகவும் வெண்டளை, களித்தளை ஆகியவை விரவியும் வரும்.
- ✓ மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கு ஏற்ப அமையும்.
- ✓ ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு.

32. ‘சுற்றுச் சூழலைப் பேணுவதே இன்றைய அறம்’ என்ற தலைப்பில் உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.

- சுத்தம் சுகம் தரும்.
- சுத்தம் சோறு போடும்.

என்னும் பழமொழிகள் தூய்மையை வலியுறுத்துவன.

- வீட்டைத் தூய்மையாக வைத்திருத்தல்
- குப்பைக் கூளங்களை அகற்றுதல்
- வீதிகளைத் தூய்மைப்படுத்துதல்
- மரங்களை வளர்த்தல்
- நல்ல காற்றினை சுவாசித்தல்

நோய்கள் வருவதற்கான காரணங்கள்:

- வீட்டில் எப்போதும் தூய்மை இல்லாமை
- காற்றோட்டம் இன்மை
- அழுக்கு ஆடைகளை உடுத்துதல்
- நோயாளியுடன் இருத்தல்

ஆகிய காரணங்களால் நமக்கு நோய்கள் வருகின்றன.

சுகாதாரத்தை ஏற்படுத்தும் வழிகள்:

- நகரில் தொழிற்சாலைகள் அமையாமல் தடுத்தல்
- கழிவு நீர் ஆற்றில் கலப்பதைத் தடுத்தல்
- நெகிழிப் பொருட்களை பயன்படுத்தாது இருத்தல்
- வாகனக் கட்டுப்பாடு
- எச்சில் துப்புதல்
- சிறுநீர் கழித்தல்

நம் வீடு – நம் நாடு என ஒவ்வொருவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

33. வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.
    - ஒவ்வொரு வீட்டிலும் நிகழும் நிகழ்வை கவிஞர் எடுத்து உரைக்கிறார்.
    - பொங்கல் விழா ஊரெங்கும் கோலாகலக் கொண்டாட்டம்.
    - என் பங்காக நானும் வாளித்தண்ணீரை எடுத்து சன்னலைத் தூய்மைப்படுத்தினேன்.
    - கந்தைத்துணி, கட்டைத் தூரிகை எடுத்துக் கொழுஉ வீடு முழுவதையும் தூய்மைப்படுத்தினேன்.
    - வீடும் நாடும் தூய்மை பெற ஒவ்வொருவரும் இப்பணியைச் செய்ய முன் வர வேண்டும்.
34. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
    - ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும்.
    - இயற்சீர் வெண்சீர் மட்டுமே பயின்று வரும்.
    - இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டுமே பயின்று வரும்.
    - ஓரசை வாய்பாட்டில் நாள், மலர், காசு, பிறப்பு என இவற்றுள் ஏதேனும் ஒன்று கொண்டு முடியும்.
    - இரண்டடி முதல் பன்னிரண்டடி வரை வரும்.

## இயல் – 8

35. ‘உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது’ இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக.

    இடம் : காலக்கணிதம்

    ஆசிரியர் : கண்ணதாசன்

    பொருள் : பேசிய வார்த்தை உடம்பைத் தொடாது.

    விளக்கம் :

    - மாற்றம் என்பது மனிதகுலத் தத்துவம் ஆகும்.
    - மாறும் உலகின் மகத்துவத்தை அறிய வேண்டும்.

- ❖ நன்மை தீமை அறிய வேண்டும்.
- ❖ தலைவர் மாறுவர்
- ❖ அவைகளும் மாறும்
- ❖ ஆனால் தத்துவம் மாறாது.
- ❖ கொடுக்க வேண்டியதைக் கொடுக்க வேண்டும்.
- ❖ குரைக்க வேண்டியதை குரைக்க வேண்டும்.
- ❖ பேசிய வார்த்தை உடம்பைத் தொடாது.
- ❖ நானே தொடக்கம்
- ❖ நானே முடிவு
- ❖ நான் உரைப்பது தான் நாட்டின் சட்டம்.

**இயல் – 9**

**36. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" – இடஞ்சுட்டிப் பொருள் தருக.**

இடம் : நாகூர்ரூமியின் கவிதை "சித்தாளு"

பொருள் :

- ➢ கட்டடம் கட்டுவதற்குத் தேவையான கட்டுமானப் பொருட்களைச் சித்தாளுகள் சுமக்கிறார்கள்.
- ➢ வியர்வை சிந்தி, உடல் சோர்வுற்று, வேதனைப்பட்டு பல இன்னல்கள் மத்தியில் சுமக்கிறார்கள்.
- ➢ சித்தாளுகளின் மனச்சுமையை, உணர்வற்ற உயிரற்ற செங்கற்கள் அறியப் போவது இல்லை.
- ➢ தொழிலாளர்களின் மனச்சுமையை அறியாத செங்கற்களைப் போலவே இருக்கும் கல்மனங்களுக்குள் மனிதத்தைப் புகுத்தி விடுகிறார்கள்.

**37. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறாந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோக மித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் தர்க்கத்திற்கு அப்பால் கதை மாந்தர் வாயிலாக விளக்குக.**

ஜெயகாந்தன் கூற்று:

- ❖ தோல்வி நிச்சயம் என்ற மனப்பான்மையுடன் போன நான் வழக்கத்திற்கு மாறாக அன்று தோற்றுப் போனேன்.
- ❖ தோல்வி நிச்சயம் என்ற என் மனப்போக்கு தோற்றது. என் வாழ்க்கையே நிர்ணயிக்கப்பட்டது.
- ❖ என் வெற்றியைக் கொண்டாட பிச்சைக்காரனுக்கு பிச்சைப் போட்டதில் நாலணாவில் அந்த நல்ல நாளைக் கொண்டாடி விட்ட நிறைவு பிறந்தது.
- ❖ காலணாத்தான் கடன் தரலாம்.
- ❖ தருமத்தைத் தர முடியுமா?
- ❖ தருமத்தை யாசித்து தந்தால் தான் பெற முடியும்.
- ❖ ஒருவனுக்கு என்ன கிடைக்க வேண்டுமே அது தான் கிடைக்கும்.
- ❖ நாம் எப்படி முயற்சி செய்தாலும் நமக்கு கிடைப்பது தான் கிடைக்கும்.
- ❖ ஜெயகாந்தன் கதை மாந்தரின் மனப் போராட்டத்தை துல்லியமாக சித்தரிப்பதில் சிறந்தவர்.

**38. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?**

- ✓ கருணையன் தன் தாய் எலிசபெத் இறந்த பிறகு வாழும் சூழ்நிலை அறியாது வருந்தினான்.
- ✓ நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
- ✓ அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத உடலின் தன்மையை அறியேன்.
- ✓ உணவுகளை தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்.

- ✓ **காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன் என கருணையன் கூறுகிறார்.**